★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 26உ வெள்ளி (8—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 27உ சனி (9—6—56) [இதழ் 30

சென்னை சர்க்கார் ஊழியர்கள்: நேருவிடம் முறையிடுவர்!

சென்னை என். ஜி. ஓ. குழுவொன்று பிரதமர் நேருவை விரைவில் சந்தித்து, சென்னை என். ஜி. ஓ. சங்கக் கோரிக்கைகளை விளக்கிச் சொல்லுமென்றும், அக்குழுவில் தோழர்கள் எம். ஏ. மாலிக், டி. இராமசாமி (அய்யங்கார்), எஸ். என். ஆழ்வாரப்பன், எஸ். இராஜு (பிள்ளை) ஆகியோர் இருப்பர் என்றும் தெரிய வருகிறது.

கிராக்கி 'அலவன்ஸ்' விஷயத்திலும், மற்றும் இதர சலுகைகளிலும் இந்தியப் பேரரசின் விகிதங்களை அமுல் நடத்தும்படி மாநில அரசினரை சென்னை என். ஜி. ஓ. சங்கம் கோரியுள்ளது.

'மக்களாட்சிக்குக் கல்வி மிகவும் தேவை'

வள்ளுவரும், பிளேட்டோவும் இதை வலியுறுத்தியுள்ளனர்

'சோழன் காலத்தில் அமைச்சர்களின் தகுதி—திறமை வரையறுக்கப்பட்டிருந்தன!'

'இவை, இந்நாள் அமைச்சரவையைப் பொறுத்தவரை தேவையில்லை எனக் கருதப்படுகிறது'

மக்கள் மக்களாகவும், நாடு நாடாகவும், வாழ்வு வாழ்வாகவும் இருக்க நாம் பணிபுரிய வேண்டும்

தமிழ்ச் சங்கப் பொன் விழாவில் பொதுச்செயலாளர் கருத்துரை

"எதிர்காலத்தில் மக்கள் மக்களாகவும், நாடு நாடாகவும், வாழ்வு வாழ்வாகவும் இருக்க நாம் பணிபுரிய வேண்டும். நாம் அனைவரும் தமிழர்கள் என்ற முறையில் பணி செய்கிறோம். தமிழர்கள் அனைவரும் பண்பாட்டால் ஒன்றுபட வேண்டும். எதிர்கால வளர்ச்சிக்குரிய திட்டத்தை வகுக்க இதுபோன்ற பொன்விழாக்கள் நடைபெறுகின்றன,"

என்று, 5-6-56-ல் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழாவில், 'சங்க கால அரசியல்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"1956-ம் ஆண்டை, பழைய சங்க காலத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்பது எனது நோக்கமல்ல; சங்ககால அரசியல் அமைப்பானது, தமிழர்கள் எண்ணும்போதெல்லாம் எழுச்சியையும், விழிப்பையும் கொடுத்திருக்கிறது. சங்க கால அரசியல், தடையீடின்றி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்திருந்தால், இன்று எவ்வாறு இருக்கும் என்பதைத்தான் காண வேண்டும்.

"கிரேக்க, ரோம்நாட்டு அரசியலைப் பற்றியும், பிளேட்டோவின் அரசியலைப் பற்றியும் நாம் படித்தோமானால், நகரங்கள் எல்லாம் நாடாகவே காட்சியளித்தன என்பதைக் காணலாம். கிரேக்க நாட்டில் வளர்ந்த ஆட்சி முறையானது, நமது சங்ககால ஆட்சி முறையைத்தான் நமக்கு நினைவூட்டுகின்றன."

உலகத்தில் நாகரிகம் தோன்றியது லெமூரியாக் கண்டமென்றும், இன்று அப்பகுதி கடலால் மூழ்கடிக்கப்பட்டதென்றும் குறிப்பிட்டுவிட்டு, அவர் மேலும் சொன்னார்:—

'லெமூரியாக் கண்டத்து நாகரிகம், மொகஞ்சதாரோ—ஹரப்பா நாகரிகமாகத் திகழ்ந்தது. 'தமிழகத்திலிருந்துதான் உலகத்திற்கே நாகரிகம் பரவிச் சென்றது' என்று அறிஞர் ஈராஸ் என்ற ஆராய்ச்சிப் பெரியார் கூறியுள்ளார். தன்னைப் பற்றி குறிப்பிட்ட ஈராஸ், 'நான் ஸ்பெயின் தேசத்திலிருந்து வந்த திராவிடன்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

'அரசர்கள் வீற்றிருக்கும் அரண்மனைக்குச் செல்லும் புலவர்கள் கை கட்டாமல், குனியாமல், வளையாமல் தலை நிமிர்ந்தே சென்றுள்ளார்கள். இதிலிருந்து சங்க கால அரசியலில் தமிழ்ப் புலவர்களுக்கிருந்த மதிப்பை நன்றாக உணர முடிகிறது.

"கல்வி, மக்கள் ஆட்சிக்கு மிகவும் தேவையானது என்று அரசியல் மேதை பிளேட்டோவும், திருவள்ளுவரும் கூறியுள்ளார்கள்.

"சோழன் காலத்தில் அமைச்சரவை அமைப்பதென்றாலும், சில வழித் துறைகள் இருந்தன. அமைச்சர்களின் தகுதி—திறமை வரையறுக்கப்பட்டிருந்தன. மக்களாட்சி முறையில் இந்தப் பண்பைத்தான வரவேற்பார்கள். இன்று ஏனோ இந்தத் தகுதி, திறமை என்பதெல்லாம் அமைச்சரவையைப் பொறுத்தவரைத் தேவையில்லை என்று கருதப்பட்டு வருகிறது.

"வளம் மிகுந்திருந்த நமது நாட்டில் இன்று வறுமைதான் எஞ்சி நிற்கிறது.

"'மக்கள் அழத் தொடங்கினார்களென்றால் அரசுக்குக் கேடு காலம்,' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்; 'ஆட்சி சரியாக நடைபெறாத காலத்தில் மக்களின் உள்ளம் குமுறும்,' என்றும் அவர் கூறுகிறார்.

"எதிர்காலத்தில் தமிழர்கள் உள்ளத்தில் உணர்ச்சியும், உத்வேகமும் ஏற்பட இதுபோன்ற விழாக்கள் பெரும் துணைபுரியும்.

"சங்க கால அரசியலைப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் தமிழில் ஆட்சியை நடத்துவது கடினமல்ல."

"இலக்கணமும், இலக்கியமும், பண்பாடும் இல்லாத ஒரு மொழி, நாட்டை ஆள முடியும் என்றால், இந்தத் துறையில் எல்லா வளமும் பெற்ற தமிழ் மொழியானது ஏன் ஆட்சி மொழியாக இருக்கமுடியாது"?

என்று, பொதுச்செயலாளர் அவர்கள் வினவெழுப்பினார்.

விடுதலை கோரும் கென்யாவில் 11 வயதுச் சிறுமிகள் கைது செய்யப்படும் கொடுமை!

பிரிட்டிஷ் காலனி மந்திரியின் மறுப்புக்கு மறுப்பு

லண்டன், ஜுன் 6—

இளம் பெண்கள், 12 வயதுக்குட்பட்ட சிறுமிகள், கென்யாவில் சிறைப்படுத்தப்படவில்லை என்ற காலனி மந்திரியின் கூற்றை மறுத்து ஐலீன் பிளேட்சர் என்ற பெண்மணி அறிக்கை தந்திருக்கிறார்.

தான், கென்யாவில் ஒரு புனரமைப்பு இலாகா அதிகாரியாக இருந்த நேரத்தில், 11 வயதுக்குட்பட்ட பெண்கள் சிறைப்படுத்தப்பட்டு, அவர்கள் சக்திக்கு மீறிய கொடுமையான வேலை வாங்கப்படுவதை நேரிலேயே கண்டதாகவும் அந்த அம்மையார் பத்திரிகை ஒன்றில் எழுதியிருக்கிறார்.

முன்னதாக, மக்கள் சபையில் இதுபற்றி கேள்வி எழுப்பப்பட்டபோது, 14 வயதுக்கு மேற்பட்டவர்களே சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்றும், சிறுமிகள் எவரும் சிறைப்படுத்தப்படவில்லை என்றும், சிறை அதிகாரிகள் தந்த தவறான செய்தியினாற்றான், சிறைப்படுத்தப்பட்டோரின் வயது நிர்ணயம் தவறுவித்து என்றும், காலனி மந்திரி ஆலன் லெனுக்ஸ் பாயிட் கூறியிருந்தார்.

விவகாரத்திற்கு ஆளான பெண்கள் மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டபோது, 15 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டதாயும் மந்திரி கூறியிருந்தார்.

தமிழ்ச் சிற்பக்கலை வடிவில் நகர சபை

திரிகோணமலையில் அமையும்

இன்ப எழிற் காட்சிகளைக் கொண்ட திரிகோணமலையில் தமிழ் சிற்பக் கலை வடிவில் நகர சபையும், நகரமண்டபமும் அமைப்பதென இலங்கை திரிகோணமலை நகரசபை தீர்மானித்துள்ளதாம்.

பம்பாய் போலீஸ் மீண்டும் சுட்டது

மராட்டியர் கிளர்ச்சி இடைவிடாது நடைபெறுகிறது

பம்பாய், ஜுன் 7—

சம்யுக்த மராட்டியம் கோரி தொண்டர் குழு ஒன்று, தடையுத்தரவுகளைமீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளது.

தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதை அறிந்த சிலர், ஆத்திரமடைந்து, பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டதாகவும், அதன் விளைவாகப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், மாறாக, துப்பாக்கிப் பிரயோகத்திற்குமுன் நடைபெற்ற கல்லெறிதல் போன்ற சம்பவங்களின் விளைவாக ஆறு போலீஸ் அதிகாரிகளும், 5 'கான்ஸ்டபின்'களும் அடிபட்டனர் என்றும் போலீசார் அறிவித்திருக்கிறார்கள்.

ஒரு போலீஸ் அதிகாரி, கூட்டத்தினரால் வீசப்பட்ட மூன்று நாட்டு வெடிகுண்டுகளில் ஒன்றினால் காயம் பட்டார் என்றும், இதரர் கல்லெறியினால், காயம் பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

வேறு ஒரு இடத்தில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் கைது செய்யப்பட்டபின் எழுந்த நிலைகளை ஒட்டி போலீசார் ஒரு கூட்டத்தின்மீது தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

கொழும்பு நகர் அமைதி பெறுகிறது

கொழும்பு, ஜுன் 7—

'இன்று கொழும்பு நகரம் அமைதியாக இருக்கிறது; தமிழ்-எதிர்ப்பு அமளியால் இரு தினங்களாக இருந்துவந்த பெரும் நெருக்கடி இன்று தணிந்துவிட்டது; இன்று காலையில் கடைகளும், வாணிப நிலையங்களும் அமைதி நிலையைப் பெற்றன; வழக்கம்போல் மக்கள் நடமாட்டம் தொடங்கிவிட்டது,' என்று தெரியவருகிறது.

'சூறைக்கும், அடிதடிக்கும் இலக்காயிருந்த பேட்டையில் பெரும்பாலான கடைகள் இன்று திறக்கப்பட்டன. வழக்கமான வண்டிப் போக்குவரத்து ஆரம்பித்துவிட்டது. சம்பவங்களே தமில்லை. ஆயினும் ஆயுதப் போலீஸ், இராணுவப் பாதுகாப்பு இருந்து வருகிறது. முன்னெச்சரிக்கையாக கள், சாராயக் கடைகள் இன்றும் மூடப்பட்டன; என்ற தகவலும் தரப்படுகின்றது.

சோதரர்களுக்கு பாடியாலா மன்னர் இழைக்கும் கொடுமை!

ஊர்வலம் நடத்தி கண்டிக்கின்றனர் இராசகுடும்பத்தவர்

பாடியாலா, ஜுன் 7—

பாடியாலா மன்னரின் ஒன்றுவிட்ட சகோதரர்கள், மன்னர் தங்களைச் சரியாகக் கவனிப்பதில்லை என்று கூறி, மன்னருக்கு எதிராகக் கிளம்பியிருக்கின்றனராம்.

எரியும் தீவட்டிகளையும், கருப்புக் கொடிகளையும் தாங்கிக்கொண்டு அவர்கள் ஊர்வலம் வந்தார்களாம், பாடியாலா நகர வீதிகளில்!

'எங்களுக்கு நியாயம் வழங்குக!' 'அநியாயம் ஒழிக!'—என்றெல்லாம் அவர்கள் கோஷமிட்டுக்கொண்டே ஊர்வலம் வந்தனர்.

மன்னரின் உறவினர்களில் 10 பேர்களும், மற்றும் சிலரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனராம்.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், மன்னரின் சோதரர்கள் - சோதரிகள் கலந்துகொண்டு தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னார்களாம்!

இவர்களை, லால்பாக் அரண்மனையிலிருந்து சட்ட விரோதமாக மன்னர் வெளியேற்றினார் என்றும் கூட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உள்ளூர் அகாலி, காங்கிரஸ், ம. சோ. கட்சித் தலைவர்கள் இந்த 'இராஜ குடும்ப'த்தவருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைக் கண்டித்திருக்கின்றனராம்.

பசிபிக் கடலில் நீர்வளிக் குண்டு பரிசோதனையாம்!

லண்டன், ஜுன் 7—

அடுத்த ஆண்டு முதல் ஆறு திங்களுக்குள் பசிபிக் கடலில் ஒரு முனையில் பிரிட்டன் நீர்வளிக் குண்டு சோதனை நடத்துமென பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் பாராளு மன்றத்தில் அறிவித்தார் எனத் தெரிகிறது.

சிரபுஞ்சியின் சிறப்பு!

பூனா, ஜுன் 7—

உலகிலேயே அதிக மழை பெய்யக்கூடிய அசாமிலுள்ள சிரபுஞ்சியில், ஜுன் திங்கள் 4-ந் தேதியன்று பெய்த பெருமழை, அதற்கு முந்தின ஆண்டுகளில் பெய்த மழையின் அளவையும் அதிகரித்துவிட்டது என அறிவிக்கப்படுகிறது.

ஜுன் திங்கள் 5-ந் தேதி காலை 8-30 மணியுடன் முடிவுற்ற 24-மணி நேரத்திற்குள் அங்கு 37.5 அங்குல மழை பெய்திருக்கிறது. இப்புதிய அளவு 1934 ஆண்டு ஜுன் திங்கள் 21-ந் தேதிய சாதனையை ([illegible] அங்குலம்) கடந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—6—'56 வெள்ளி

எவரை ஏமாற்றவோ?

நடைமுறையில் இருந்து வரும் பல கட்ட விற்பனை வரிக்குப் பதிலாக ஒரு கட்ட விற்பனை வரியை விதிக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை, திரிசிரபுரம் மாநாட்டில் நமது முன்னேற்றக் கழகம் நிறைவேற்றி இருக்கிறது.

இப்பல கட்ட விற்பனை வரியின் விளைவாக, பெரிய-சிறிய வியாபாரிகள் பலரும் பலவித மானத் தொல்லைகளுக்கு ஆளாகிவருகின்றனர். விற்பனை வரி வசூலதிகாரிகளிடம் சிக்கி வியாபாரிகள் பட்டுவரும் அல்லல்களுக்கும் எல்லையே கிடையாது.

குறிப்பிட்ட ஒரு பொருள் கிடங்கிலிருந்து அல்லது உற்பத்தி இடத்திலிருந்து பொது மக்களை அடைகிறவரையில் பல கைகளுக்கு மாறுகின்றன. இப்படி கைமாறுகின்ற ஒவ்வொரு கட்டத்திலும் குறிப்பிட்ட பொருள்மீது விற்பனை வரி போடப்பட்டு வருகிறது. இதனால், விற்பனை வரி என்ற பெயரால், குறிப்பிட்ட ஒருபொருள் பலமுறை வரி வசூலிப்புக்கு உள்ளாகிறது. எனவே, இப் பலமுறை வரி விதிப்பு ஒழிக்கப்பட்டு, குறிப்பிட்ட ஒரு பொருள்மீது, கைமாறும் ஏதாவது ஒரு கட்டத்தில் வரி வசூலிப்பது முறையாகும் என்பது வியாபாரிகளின் விழைவாகும்.

விற்பனை வரியின் சுமை முழுவதையும் முடிவாகத் தாங்க வேண்டியவர்கள் பொதுமக்களேயானாலும், அதை வசூலித்துத் தருவதிலும், அதற்குரிய கணக்கு வைத்தலிலும், அதிகாரிகள் செய்யும் கெடுபிடிகளிலும் தொல்லைபட்டுக்கிடந்த வியாபாரிகள், பலகட்ட விற்பனை வரியை ஒருகட்ட விற்பனை வரியாக மாற்ற வேண்டும் என்பதில், பெருங் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

அதற்காக அவர்கள் மாநாடுகள் கூட்டினர். சிற்சில இடங்களில் அடையாளக் கதவடைப்புஞ்செய்தனர்.

இவ்வளவிற்கும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் அசைந்து கொடுக்காது, உடும்புப் பிடியாகவே, பல கட்ட விற்பனை வரியைப் பற்றித் தொங்கிக்கொண்டிருந்தனர்.

இத்துறையில் வியாபாரிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வியர்த்தமாகிவிட்டன.

ஒருகட்ட விற்பனை வரியைக் கோரும் வியாபாரிகளின் கிளர்ச்சிகளில் பொதிந்துள்ள நியாயத்தை ஒப்புக்கொண்டு, நமது கழக மாநாடும் அவர்கள் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

தேர்தலில் நமது கழகமும் பங்கு கொள்வது என்ற முடிவு கண்டு கருத்துக் குழம்பிக் கிடக்கின்ற முதலமைச்சர், ஒரு கட்ட விற்பனை வரிக்குச் சாதகமாக மாநாடு நிறைவேற்றியுள்ளத் தீர்மானத்திற்கும் களங்கம் கற்பித்திருக்கிறார். நமது கழகம், மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பதின் மூலம் வியாபாரிகளை மயக்கப் பார்க்கிறது என்று முதலமைச்சர் திருச்சி கூட்டத்தில் குளறி இருக்கிறார்.

வியாபாரிகள் கோரிக்கையை நாம் ஆதரிப்பதில் உள்ள நல்லெண்ணத்தை பொதுவாக காங்கிரஸ் ஆட்சியாளர்களாலும், குறிப்பாக முதலமைச்சராலும் புரிந்து கொள்ள முடியாது என்பதையும், புரிந்து கொண்டாலும், அதை நாணயமாக ஒப்புக்கொண்டு துணிவுடன் வெளிப்படையாகப் பேச முடியாது என்பதையும் நாட்டு மக்கள் அறிந்தே இருக்கின்றனர். அந்த நற்பண்பை, நாமும், அவரிடத்தில் எதிர்பார்த்ததும் அறவே கிடையாது.

கூட்டம் போட்டு கோரியும், மாநாடுகள் நடத்தித் தீர்மானித்தும், கதவடைப்புச் செய்து கண்டித்தும், ஒரு கட்ட விற்பனை வரியை ஒப்புக்கொள்ள முன்வராது பிடிவாதம் காட்டி வரும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் போக்குக் கண்டு, வியாபாரிகள் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். அதன் பலனாக, அடுத்துவரும் பொதுத் தேர்தலில், பல கட்ட விற்பனை வரியை ஒரு கட்ட விற்பனை வரியாக மாற்ற வாக்குறுதி அளிக்கும் கட்சிகளுக்கே வாக்களித்து ஆதரிப்பது என்றத் தீவிரமான முடிவிற்கு வியாபாரிகள் வந்துவிட்டனர். இந்தச் செய்தி, கழகத்தின் தேர்தல் முடிவு கேட்டு குழம்பிக் கிடக்கிற முதலமைச்சரை, மேலும் குழப்பத்திற்குள்ளாக்கி விட்டது.

அவசரம் அவசரமாக வியாபாரிகளின் விருப்பத்தைப் பூர்த்திச் செய்வதில் முதலமைச்சர் முனைந்திருக்கிறார். இது பற்றி திட்டவட்டமான உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்வரையில்கூட காத்திருக்கும் மனமில்லாது, வியாபாரிகளின் கோரிக்கையை நடைமுறைக்குக்கொண்டுவர தாம முடிவு கட்டியிருக்கும் செய்தியை உடனடியாக வியாபாரிகளுக்கு அறிவித்துவிடும்படியாக, கூட்டமைச்சர் மாணிக்கவேலர் அவர்களுக்கு உரிமை தந்துள்ளார்.

பலகட்ட விற்பனை வரியை அறவே கைவிட்டு ஒரு கட்ட விற்பனை வரியை கைக்கொள்ள வேண்டும் என்பதுதான் வியாபாரிகளின் ஒருமித்த கோரிக்கை. அந்தக் கோரிக்கையை அப்படியே ஏற்றுக் கொள்ளாது, குறிப்பிட்ட சில பொருட்களைப் பொறுத்தமட்டில், ஒரு கட்ட விற்பனை வரியை நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டு இருப்பதாகவும், அது பற்றிய விளக்கமாக அறிக்கை ஒன்றை விரைவில் அரசாங்கம் வெளியிட இருக்கிறது என்றும், நிலவரி அமைச்சர் மதுரையில் அறிவித்துள்ளார்.

எந்தெந்தப் பொருட்களுக்கு ஒருகட்ட விற்பனை வரி விதிக்கப்பட இருக்கிறதென்பது இனித்தான் தெரிய வேண்டும். ஏதோ சில பொருட்கள் வரையிலாவது தங்கள் கோரிக்கையை ஒப்புக்கொள்ள அரசாங்கம் முன்வந்து விட்டதே என்பதற்காக மகிழ்ந்துவிட மாட்டார்கள் வியாபாரிகள் என்ற உண்மையை நாம் நன்கு அறிவோம். வாய்ப்பைக் கைநழுவ விட்டுவிடாது, அரசாங்கத்தின் இம்மாற்றத்தை ஒரு பற்றுகலாகக் கொண்டு, தங்கள் கோரிக்கையை முழு அளவில் அரசாங்கம் ஏற்றுக கொள்ள வேண்டுமென, வியாபாரிகள் கிளர்ச்சி செய்ய வேண்டும். அக்கிளர்ச்சி கண்டிப்பாக வெற்றி பெற்றேதீரும் என்பது, அரசாங்கத்தின் இப்புதிய போக்கே மெய்ப்பிக்கிறது.

சில பொருட்கள் மீது மட்டுமாவது, பலகட்ட விற்பனை வரியைக் கைவிட்டு, ஒருகட்ட விற்பனை வரியை மேற்கொள்ள அரசாங்கம் முன்வந்து இருப்பதற்கு, வியாபாரிகளின் கிளர்ச்சியே பெரிதும் காரணமாகும் எனக் கொள்ளப்படுவதானும், நமது மாநாட்டுத் தீர்மானமும் ஒருவகையில் உடனடி காரணமாகும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. விஷயவிளக்கத்திற்காக இதைக் குறிப்பிட்டோமேயல்லாது தற்பெருமைக்காக அல்லவே அல்ல.

ஒரு கட்ட விற்பனை வரியை ஆதரித்து நிறைவேறிய நமது மாநாட்டுத் தீர்மானத்தைக் குறித்து, வியாபாரிகளை மயக்க இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என இழிமொழி பேசிய முதலமைச்சர், சில பொருட்களுக்கு மட்டும ஒருகட்ட விறபனை வரி விதிக்கத் தாம் முன்வந்திருப்பது,வியாபாரிகளை மயக்குவதற்காக அல்லாது வேறு எதற்காக எனக் கேட்கிறோம. வியாபாரிகளின் ஆதரவை இழந்துவிடாமல் இருப்பதற்கே இவ்வரி மாற்றம் என்பதை எவரும் உணர்ந்துகொள்வது சுலபமாகும். இந்தத் தந்திர நடைமுறையில் ஏமாந்துவிடக் கூடியவர்கள் வியாரிகள் அல்ல என்பதையும் முதலமைச்சர் அறிந்திருப்பது நல்லது.

கொழுத்த உருவம்

உயிரைக காப்பாற்றிய விந்தை

ரேவா, ஜுன் 5—

'கொழுத்த உருவங்கள' எப்போதுமே பொதுவாக பிறா்ை நகைப்பிற்குத் தீனியாகத்தான இருக்கின்றன

ஆனால், இங்கு சதுரேஷ் என்ற கிராமப பஞ்சாயததுக்களின் 'இன்ஸ்பெக்டா' ஒருவா, தனனுடைய கொழுத்த உருவத்தினால உயிா தப்பி இருக்கிறாா!

குனூர் என்ற கிராமத்திற்கு, வழக்கமான தணிக்கை வேலைகளுக்காகச் சென்றிருந்தபோது, அவா நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்திருக்கிறார்; அப்போது உயரே கூரையிலிருந்து பாம்பு ஒனறு, இவர் படுக்கையில் விழுநதது; இதைக கவனிக்காத அவா, அந்தப பாமபு மேலேயே, புரண்டு படுத்து மேலும தூஙகிவிட்டார்.

காலையில எழுந்து அவர் பார்த்தபோது, பாமபு நசுஙகி செததுப் போய், தன சட்டையின முதுகுப் புறததில் ஒட்டிககொண்டிருபபதை கண்டு நடுககிட்டாராம!

திருமபிப் படுததும், பாம்பு நசுஙகிச் சாவது என்றால அவரது உருவம எவ்வளவு முரடானது எனறு பாாததுக்கொள்ளுங்கள்!

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் சென்னை மாநிலத்தில பலவேறு மாவட்டங்களிலும் 91 புதிய பஞ்சாயத்துகளும், மார்ச் மாதத்தில 119 பஞ்சாயத்துகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சர்க்கார் ஆதரவில் நடந்த சர்வோதய சம்மேளனம்!

அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பது உண்மையா?

சர்வோதயம் முழுவதும் 'நேரு, காமராசர்' மயம்தானே!

"சர்வோதயப் பொருட்காட்சிக்குப் போகலாம், வாருங்கள்! இது தான் பொருட்காட்சி—எல்லாம், சர்க்கார் விளம்பரம்! ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரம்! இரவிலே, ஐந்தாண்டுத் திட்டத்தை விளக்கும் படக்காட்சி—அதனை விளக்கும் நாடகம்!

"அடடா! எத்தனை சர்க்கார் 'ஜீப்'புகள்! எத்துனை சர்க்கார் அதிகாரிகள்—எல்லாம் சர்க்கார் மயம்! எல்லாம் நேரு மயம்! எல்லாம் காமராஜ் மயம்!"

"இதுதான் சர்வோதய மாநாடு! சர்வோதயம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாம்! இதனை நம்ப வேண்டுமென்று சொல்லுகிறார்கள்!

"இது வேடிக்கையாக, இல்லை? சர்வோதயத்திலே என்ன இல்லை? வடநாடு—தென்னாடு பிரச்சினை இல்லையா? தமிழ்—இந்தி பிரச்சினை இல்லையா? பதவி அரசியல் இல்லையா? சர்க்கார் அதிகாரம இல்லையா? இவை அத்தனையும் உண்டு, அங்கே!

"சர்வோதய மாநாட்டை நடத்த சர்க்கார், இலட்சக் கணக்கான ரூபாய் செலவிட்டுள்ளது என்பதை யாரால் மறுக்க முடியும்?"

என்று, 3—6—56 'சோஷலிஸ்ட்' என்ற வார இதழில் எழுதப்பட்டுள்ளது.

அவ்விதழில், மேலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

"'வினோபாஜி, 'அரசியல்' என்ற இல்லறத்தைத் துறந்துவிட்டு,'சர்வோதயம்' என்ற துறவறத்தை மேற்கொண்டார்; 'பூதான'த்தை ஆரம்பித்தார்; 'இது, அரசியல் சம்பந்தப்பட்டதல்ல' என்றார்.

"பூமிதானத்திற்கு மக்களிடத்திலே 'மவுசு' ஏற்படவில்லை—அதாவது, மக்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. 'அரசியல் வர்ணம்' கொடுப்பதற்காக, ஜெயப்பிரகாஷ் அவர்களையும் சேர்த்துக்கொண்டார்; பிறகு, காங்கிரஸ்காரர்களும் வந்து சேர்ந்தார்கள்; சர்க்கார் ஆதரவு அமோகமாகக் கிடைத்தது; கேட்பானேன்? சர்வோதயத்தில் அரசியல் நுழைந்தே நுழைந்து விட்டது.

"சென்ற வாரம், மூன்று தினங்கள், காஞ்சீபுரத்தில், 'சர்வோதய மாநாடு,' அமோகமாக—அமர்க்களமாக—ஆடம்பரமாக நடந்து முடிந்தது.

"இந்த மாநாட்டிற்குப் போனால்—போனவுடன், நமமைப் போலீஸ்காரர்களதான வரவேற்கிறார்கள்; வரவேற்பு பலமாக இருந்தது மாநாட்டுப் பந்தலைச் சுற்றிலும் சுமார் 400 போலீஸ்காரர்கள்! 50-க்கு மேற்பட்ட சாக்கிள் இன்ஸ்பெக்டர்கள்! 10 000-த்திற்கு மேற்பட்ட உயர்தர போலீஸ் அதிகாரிகள்!

"இவர்களைத்தாண்டி உள்ளே செல்வோம; சுற்றிலும் ஏராளமான கார்கள்—அத்தனையும அமெரிக்காவிலிருந்து இறக்குமதியானதுதான் 1939-ம ஆண்டிலிருந்து நேற்றுவரையில் இறக்குமதியான அத்தனை 'மாடல்' கார்களையும் அங்கே காணலாம! இவர்கள் எல்லாம் சர்வோதய மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் — சந்தேகப்பட வேண்டாம்!

"கார்களைக் கண்ணோட்டம் விட்டுவிட்டு, இன்னும கொஞ்சம் உள்ளே நுழைந்தால், கதர் ஆடை திரளான மக்கள்!

"சிலக் ஜிப்பா அணிந்த திருமேனி; தும்பைப் பூ போன்ற 4 கெஜத்திலே 'லைஸ்' கதர்! வேஷ்டியை இரட்டையாக உடுத்தி இருக்கும் இடை! தங்கச் சங்கிலி தொங்கும் பருத்தக் கழுத்து! மடிப்புக் கலையாமல் கழுத்தைச் சுற்றி அணிந்த அந்த அங்க வஸ்திரத்தையும், சில்க் ஜிப்பாவையும மீறிக்கொண்டு, கழுத்திலேயிருக்கும் தங்கச் செயின் காட்சியளிக்கக் கொண்டிருக்கும் காட்சி! நவரத்தினக் கற்கள் பொறித்த தங்கக் கடிகாரச் சங்கிலி, மணிக் கட்டிலே 'டால்' வீசிக்கொண்டிருக்கும் அற்புதம்! 'டாம்கோ ஹேர் ஆயில்' தடவி, அழகாக வாரி விடப்பட்ட கிராப்புத் தலை! வாயிலே, 'கேப்ஸ்டன்' சிகரெட்—கையிலே 'கேப்ஸ்டன்' சிகரெட் டின்! தங்கப் பிரேம்போட்ட 'கூலிங்கிளாஸ்' அணிந்த கண்கள்!

"'தினத் தந்தி' கார்டூன்போல உருவம் படைத்த—மேலே கண்ட வர்ணனைகளுக்கு ஆளான உருவங்கள் பலவற்றை, நாம் அந்த மாநாட்டுப் பந்தலிலே காண முடிந்தது!

"இன்னொருபுறத்திலே சாதாரண கதராடை அணிந்த காங்கிரஸ்காரர்கள்! அவர்கள், 'மாஜி' தியாகிகளாம்! 'தியாகி மானியம் தரவில்லையே' என்று அங்கலாய்ப்போடு கூடியிருந்தார்கள்!

"அவர்கள் பேச்செல்லாம், தியாகி மானியம்தான்! முன்தினம் மாநாட்டில் பேசும்போது, ராஜாஜி தியாகிகளைத் தாக்கிப் பேசிவிட்டாராம்!

* * *

"இதற்கிடையிலே ஒரு பரபரப்பு! போலீஸ்காரர்கள், இங்கும்-அங்கும் ஓடுகிறார்கள்! 'ஓ'வென்ற கூச்சல்!

"இராசன் பாபு வருகிறார்; அமைதியாக இருங்கள்......அவர், மேடைக்குத்தான் வருகிறார்......' என்று, ஒலி பெருக்கி அலறுகிறது.

"ஜனாதிபதி கார் வந்தது; கும்பல அவரைச் சூழ்ந்துகொண்டது; போலீசார், விலக்கிக் கொண்டே போகிறார்கள்; கடைசியில அவர் மேடைக்கு வந்து சேர்ந்தார்; கூச்சலும, குழப்பமும் அடங்க சில நிமிடங்களாயின!

"இப்படிக கொஞ்சம வாருங்கள் இவர்கள் யார் தெரிகிறதா? எல்லாம அறிமுகமானவர்களதான்; ஆமாம், நமது 'மாஜி' கள—புரியவில்லையா?—பி சோ.-க்கள்! அவர்களது தலைவர் ஜெயபபிரகாஷ், ஜனாதிபதியின் அருகில அமர்ந்து அளவளாவிக் கொண்டிருப்பதைப் பார்தது, ஆனந்த வெள்ளததிலே மிதந்து கொண்டிருக்கிறார்கள்; அங்கே புகுந்து, அவர்கள் ஆனந்த நிலையைக் கெடுக்காமல், கொஞ்சம் போவோம்!

"இவர்கள் யார், தெரிகிறதா? 4-முழக கதர் வேஷ்டி; கதர் ஜிப்பா; கதர் குல்லா—இப்படி 100 பேர் ஒரே மாதிரி உடையணிந்து உலாவிக்கொண்டிருக்கிறார்களே! இந்தக் கதர் 'யூனிபாரம்' அணிந்தவர்கள், சர்வோதய ஊழியர்கள் போலிருக்கிறதல்லவா? இல்லை; இவர்கள், சுதருடைக்குள புகுந்திருக்

(4-ம் பக்கம் பார்க்க)

தம்பிவா! ஆணைக்குகட்டுப்படுகிறேன் என்று நான் கூறியது அலங்காரத்திற்காக அல்ல!

கழகத்தில் ஜனநாயகப் பண்பு மேலும் வளர வேண்டும்

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதே நாட்டில் ஜனநாயகம் தழைக்கச் செய்யத்தான்

மாநில மாநாட்டில் அண்ணா விளக்கவுரை

"'புட்பால்' அடிக்கப்பட்டால், கடைசியில் 'கோலி'ல் போய் விழும்; விழுவதற்கு முன்னல் 14 தோழர்களின் கால்களில் அது உதைபட வேண்டும். உதைபட்ட பிறகுதான் பந்து போய்விழும்; அதை விட்டுவிட்டு, இந்தக் கோலில் ஒருவன்—அந்தக் கோலில் ஒருவன்—இங்கிருந்து விசினல் பந்து அங்கே போய் விழும் என்றுல், அதற்குப் பெயர் போட்டி விளையாட்டல்ல! அதைப்போல், தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகர்கள்—அவர்கள் கனதனவான்கள் ஆனாலும்—பழம் காங்கிரஸ்காரர் ஆனாலும்—புத்தம் புதிய காங்கிரஸ்காரர் ஆனாலும்—அவர்களை, ஏறவேண்டிய படிக்கட்டுகளை ஏறி ஏறி இறங்க வைப்போம்! கெஞ்ச வேண்டிய மக்களை அவர்கள் கெஞ்ச வேண்டும்! தர வேண்டிய இலஞ்ச'த்தையும் அவர்கள் தர வேண்டும்! இதை எல்லாம் செய்த பின்பு வேண்டுமானல், காங்கிரசார் ஓரளவு வெற்றி பெறலாமே தவிர, அவர்களைப் போட்டியின்றி சும்மா மட்டும் விடுவோம் என்று அவர்கள் கருதுவார்களேயானல், நிச்சயம் ஏமாற்றமடைவார்கள்!"

என்று, அண்ணா அவர்கள், தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபடும் இலட்சியத்தைக் குறித்து, மாநில மாநாட்டில் விரிவுரையாற்றுகையில் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"காமராசரை, நான் இரண்டொரு தடவை சந்தித்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது ஒருமுறை அவரைச் சந்தித்தபோது, அவரது உற்ற நண்பர் ஒருவர், காமராசரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு என்னைக் கேட்டார்—'காமராசர் நமக்கெல்லாம் மிக வேண்டியவர்; நல்லவர்; உங்களிடத்தில் எல்லாம் நிரம்ப ஆசை உடையவர்' என்றார்;—'இருக்கலாமய்யா?' என்றேன், நான்.

'இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அவருக்குத் தொல்லை தருவதில்லை என்று மட்டும் நீங்கள் சொன்னல் போதும்; நிம்மதியாக இருக்கும்,' என்றார், அவர்!

"உடனே நான், காமராசர் பக்கத்தில் திரும்பிக் கேட்டேன்—'அவர் கூறுகிறாரே, அது உங்கள் எண்ணம்தானா?'—என்று! காமராசர் சிரித்தார்!

"மறுபடியும் நான் அந்த நண்பரையே பார்த்துக் கேட்டேன்—'என்ன, நீங்கள் சொல்லுகிறீர்கள்; காமராசர் ஒன்றும் சொல்லவில்லையே?'—என்றேன்; உடனே அந்த நண்பர் சொன்னர்—'காமராசரை எப்படியாவது ஒழித்துவிடவேண்டும் என்று பார்ப்பனர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்; இராசகோபாலாச்சாரியார் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறார்; ஆகையினல், நீங்களும் எதிர்த்தால் இந்த இரண்டு எதிர்ப்பும் ஒன்றாகச் சேர்ந்து இவர் கீழே விழுந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தாலேதான் கூறுகிறேன்; இரண்டு ஆண்டுகளுக்கு எதிர்ப்பில்லாமல இருக்கட்டும,'—என்றார்.

"உடனே நான் கூறினேன்—'நீங்கள் என்னை அப்படிக் கேட்பதே என்னை அவமானப்படுத்துவதாகும்; நான் ஏதோ, வருகிறவர்களுக்கெல்லாம் தொல்லை கொடுப்பதைப் போலவும், இருக்கிறவர்களை எல்லாம் எதிர்ப்பதைப் போலவும், யாராவது கெஞ்சிக் கேட்டுக்கொண்டால்தான் எதிர்ப்பை விட்டு விடுவதைப் போலவும் எண்ணி, நீங்கள் என்னை இப்படிக் கேட்பது, என்னை அவமானப்படுத்துவதாகும்; எனவே, மீண்டும் இதுபற்றிக் கேட்க வேண்டாம்; நான் எதிர்க்கமாட்டேன்—நன்மை செய்து கொண்டிருக்கிறவரையில்! விடமாட்டேன்—'அவர்கள் எதிர்க்கப்பட வேண்டியவர்கள்' என்று எனக்குத் தெரிந்த பிறகு! ஆச்சாரியார் பதவியிலிருந்த நேரத்தில், அவர் தஞ்சை பண்ணையாள் சட்டம் கொண்டு வந்தார்—ஆதரித்தோம்; 'ரேஷனை' எடுத்தார்—ஆதரித்தோம்; சில பல நன்மையான காரியங்களைச் செய்தார்—ஆதரித்தோம்; அவருடைய அறிவைச் சந்தேகித்தோமா? [illegible]ல், இல்லை! அவருடைய மேதாவிலாசத்தைச் சந்தேகித்தோமா? — இல்லை! ஆனல், அவை நமக்குப் பயன்படவில்லையே என்று வருத்தப்பட்டோம்; ஆனல், அவர் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார்; குழந்தைகளுடைய கையை ஒடித்தார்; கண்ணைக் குத்தினர்; உடனே அவரை எதிர்த்தோம்! அதைப்போலவே காமராசரும்! அவர், நன்மை செய்துகொண்டிருக்கும்வரை ஆதரிப்போம்! நாட்டிற்குத் தீதான காரியம் செய்தால், எதிர்ப்போம்!'—என்று நான் கூறினேன்; உடனே காமராசர், 'அதற்கென்ன, இப்போது? இருக்கட்டும்,' என்று தனது வழக்கமான தந்திரத்தைக் கையாண்டார்!

"எனவே, அடுத்தப் பொதுத் தேர்தலில் நமது கழகத் தோழர்கள் ஜனநாயகப் பண்பின்படி, 'நாடு வளர்ச்சியடைய வேண்டும்' என்ற குறிக்கோளோடு பணியாற்றுவதற்குத்தான் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதை ஒட்டிய வேலைகளைக் கவனிக்க நம்முடைய பொதுச்செயலாளர் என்னையும், என்னேடு பணியாற்ற சம்பத், ஆசைத்தம்பி ஆகியவர்களை நியமித்திருப்பதற்கும், மேலும் இருவரைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்தமைக்காகவும் அவருக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"நேற்று நான், நமது பொதுச் செயலாளரை, தம்பி வா! தலைமை தாங்க வா! உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன், வா!' என்று கூறியது, வெறும் அலங்காரத்திற்காக அல்ல! அந்த நிலை, நம்முடைய கழகத்தில் வளர்ந்துகொண்டு வருகிறது. அது மேலும் வளரவேண்டும் என்பதுதான் எல்லோருடைய உண்மையான நம்பிக்கை. அப்படி வளர்ந்தால்தான், நம்முடைய கழகம் நல்ல ஜனநாயகப் பண்போடு திகழ முடியும். அதன் மூலம்தான் நாட்டை மீட்கிற நல்ல காரியத்தில் நாம் வெற்றி பெற முடியும்."

மந்திரி சுப்பிரமணியத்தின் ஒழுங்கற்ற போக்கு!

தன் கருத்திற்கு ஆதரவு தேட கல்லூரி முதல்வர்களை அணுகினரா?

பல்கலைக் கழகத்தைக் குற்றம் சாட்டுவது நியாயமா?

"கல்வி-நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், சென்னைப் பல்கலைக் கழகத்தின்மீது ஒரு புதிய குற்றத்தைச் சாட்டியிருக்கிறார். கல்லூரி முதல்வர்களின் ஆலோசனைகளை அறிந்துகொள்ளாமல், சென்னைப் பல்கலைக் கழகம், ஓராண்டுக் காலம் முற்படிப்புச் சீர்திருத்த முடிவு செய்திருக்கிறதென்று பொருள்படும்படி திரு. சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

"நிபுணர்களுடைய ஆலோசனைகளையும், பொதுமக்களின் கருத்தையும் அறிந்துகொள்ளாமல் நிர்வாகம் நடத்துவது இப்போதுள்ள அரசினர் சிலருடைய போக்கே ஒழிய, பல்கலைக் கழகமும், இச்சிறுகேடான குற்றத்திற்குட்பட்டிருக்கிறதென்று சொல்வது, உள்ள நிலைமையை மாறுபடக்கூறுவதாகும்.

"'மாறுதல்களை, கல்லூரி முதல்வர்கள் ஆதரிப்பதாகப் - பல்கலைக் கழகத்தினர் கூறியபோதிலும், தான் விசாரித்ததில் பல கல்லூரி முதல்வர்கள் பல்கலைக் கழகத்தின் கட்டாயத்தின்பேரில் அப்படிக் கூறியதாகத் தெரிவித்ததாகவும் அமைச்சர் கூறினர்; கல்லூரி முதல்வர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்காதது மிகவும் தவறானதென்றும், பல்கலைக் கழகத்தினர் இதைக் குறித்து மீண்டும் ஆலோசிப்பார்கள் என நம்புவதாகவும் அமைச்சர் மேலும் கூறினர்,' என்று செய்தி வெளியாகியிருக்கிறது. இதன் மூலம் இரண்டு உண்மைகள் வெளிப்படையாகத் தோன்றுகின்றன; பல்கலைக் கழக முடிவைக் குறித்து கல்லூரி முதல்வர்கள் சிலரிடம் கல்வி அமைச்சர் திரு சுப்பிரமணியம் ஆராய்ச்சி செய்து தன்னுடைய கருத்திற்கு ஆதரவு தேட முற்பட்டிருக்கிறார் என்பது முதன்மையானதாகும். பொறுப்பு வாய்ந்த கல்வி அமைச்சர் பதவியிலுள்ளவர் இத்தகைய செயலில் ஈடுபட்டிருப்பது ஒழுங்கானதல்ல. தன்னுடைய கருத்திற்கு ஆதரவு தேடுவதோடு, பல்கலைக் கழகத்தின் முடிவையே மாற்றி அமைத்துவிட வேண்டும் என்ற கருத்தில் அமைச்சர் இயங்குகிறார் என்பது இரண்டாவதாகும்.

"முடிவின் பொறுப்பையேற்று நடத்தவேண்டிய கடமையாளர்களை அமைச்சர் தன்னுடைய முயற்சிக்குப் பயன்படுத்த விரும்புவது ஒழுங்கானதென்று யாரும் கூறமுடியாது. அமைச்சர் ஆழ்ந்து கவனித்திருந்தால், கட்டாய முறையைப் பல்கலைக் கழகம் கையாண்டிருக்கிறதென்ற குற்றச்சாட்டே தவறானதென்று விளங்கும். ஏனென்றால், பல்கலைக் கழக நடைமுறையே கல்லூரி முதல்வர்கள் பலரின் நேரடியான கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டது; அவர்களுடைய ஆதரவில்லாமல், எத்தகைய மேற்படிப்புச் சீர்திருத்தமும் செய்ய இயலாது. இது மட்டுமல்லாமல், சீர்திருத்தங்களை தோற்றுவிப்பவர்கள் பெரும்பாலும் கல்லூரி முதல்வர்களேயாவர்.

"பல்கலைக் கழக முற்படிப்பு வகுப்பு அமைப்பது இன்றியமையாதது என்ற கருத்தை அவர்கள்தான் தெரிவித்திருக்கவேண்டும்; கல்லூரிப் படிப்பிற்குத் தகுதியும் தரமுமற்ற மாணவர்களே அதிகமாக இருக்கிறார்கள் என்ற குறையை அவர்கள்தான் உணர்ந்திருக்கவேண்டும்; உணர்ந்து அதை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால், இச்சீர்திருத்தம் தோன்ற வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது.

"சீர்திருத்தத்தைத் தோற்றியவர்களை எப்படிக் கட்டாயப் படுத்த முடியும்? கட்டாயப்படுத்தி காரியத்தை நடத்தும்முறை இப்போதுள்ள அரசினருடையதேயன்றி பல்கலைக் கழகத்தாருடையதல்ல என்பது சென்ற சில ஆண்டு வரலாற்றைக் கவனித்து வருபவர்களுக்குப் புலப்படும்.

"எது எப்படியிருந்தாலும், சீர்திருத்தத்தைச் செயற்படுத்திய பிறகு அதை மீண்டும் ஆலோசனை செய்யவேண்டுமென்று கல்வியமைச்சர் கூறியிருப்பது பொறுப்பற்ற செயலென்று குறிப்பிட விரும்புகிறோம்.

"அரசியலுள்ள குழப்பம் அறிவு வளர்ச்சித் துறையிலும் ஏற்படவேண்டுமென்ற அவருடைய விருப்பம் நிறைவேறாது என்று அவர் உணரவேண்டும்."

இவ்வாறு, 'பல்கலைக் கழகச் சீர்திருத்தம்' என்ற தலைப்பில், 80-5-56 'தமிழ்நாடு' இதழின் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

****

'நம் நாடு'

நான்காம் ஆண்டு துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

★

15—6—56-ந் தேதியன்று நாடெங்கும் கிடைக்கும்

விலை அணா 2.

★

அண்ணா, மற்றும், கழக எழுத்தாளர் பலரும் எழுதுகின்றனர்.

****

தமிழ்நாட்டு மக்கள் சபை உறுப்பினர்களுக்கு மத்திய அமைச்சர் கைவிரிப்பு?

சென்னை மாநில பாசன, மின்சாரத் திட்டங்கள் பெரும்பாலானவை நிறைவேற்ற இயலாதவையாம்!

சென்னை மாநிலத்தில். புதிதாக பல பாசனத் திட்டங்களையும், மின்சார உற்பத்தித் திட்டங்களையும் துவக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளதாக சென்னை மாநில பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியதைப் பற்றி தெளிவாக்கிக்கொள்ள, தமிழ்நாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள் மாநாடு ஒன்றை மத்திய பாசன, மின்சார அமைச்சர் கூட்டினர் எனத் தெரிகிறது.

சென்னை மாநில மக்கள் சபை உறுப்பினர்கள் தெரிவித்த புது மின்சார, பாசனத் திட்டங்களில் பெரும்பாலானவை, "இயலாதவைகள்' என்று கருதப்படுகிறதாம். தமிழ்நாட்டு மக்கள் சபை உறுப்பினர்களுக்கு, இத்திட்டங்களை நிறைவேற்ற முடியுமா, முடியாதா என்பதைத் தெளிவுபடுத்தவே இம்மாநாடு கூட்டப்பட்டதாம்.

பாலாறு தண்ணீர் பற்றி சென்னைக்கும்—மைசூருக்கும் இருந்து வரும் தகராறு, உத்தேச மாநிலங்களின் நதித் தண்ணீர் உபயோக மசோதா அடுத்த ஜூலை மாத ஆரம்பத்தில் மக்கள் சபையில் நிறைவேறியதும் சமூகமாகத் தீர்க்கப்படுமென்று அந்த அமைச்சர் வாக்குறுதி அளித்தாராம்!

'புத்தமா? யுத்தமா?'

3-6-56 காலை 10 மணியளவில் இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில் பனைமரத்தொட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில், திரு. கு பெ. துரைசாமி தலைமையில், திரு ஐ. மாயாண்டி பாரதி 'புத்தமா? யுத்தமா?' என்ற தலைப்பில், சிறப்புரையாற்றினர். திரு இரா. த. சுந்தரராஜன, சர்க்கார் மக்கள் சக்திக்கு மதிப்பளிக்க வேண்டுமெனப் பேசினர்.

★-★★★★★★★★★★★★★★★★-★

'நம் நாடு'

நான்காம் ஆண்டு துவக்க விழா மலர்

★

விற்பனையாளர்கள் தங்கள் தேவையை 10—6—56-க்குள் தெரிவித்துவிடக் கோருகிறோம்.

****

பஞ்சாயத்து போர்டு தேர்தல்

கழகத் தோழர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்

முத்துப்பேட்டை பஞ்சாயத்து போர்டுக்கு நடைபெற்ற தேர்தலில 4-வது வார்டுக்கு முத்துப்பேட்டை தி. மு கழக செயலாளர் தோழர் வ. இராமநாதன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3-வது வார்டுக்கு முத்துப்பேட்டை எம். எம். பி. கம்பெனி சூபர்வைசர் தோழர் ஜே. கே. உசேன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விருவருக்கும் 8-6-56ல், முத்துப்பேட்டை எம். எம். பி. கம்பெனி அலுவலகத்தில் தேநீர் விருந்தும், பாராட்டுதலும் கம்பெனி அலுவலகத் தோழர்களால் அளிக்கப்பட்டது.

மணமேடு கைத்தறி நெசவாளர் சங்கம்

மு. தா. மணமேட்டில் கைத்தறி நெசவாளர் சங்கம் துவக்கப்பட்டு தோழர்கள் எஸ். ஆர். நடராசன் தலைவராகவும், பெருமான் செயலாளராகவும், கே. எம். ராஜு பொருளாளராகவும், மற்றும 8 பேர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மணமேட்டில், நெசவாளர்கள் கூலி குறைத்ததைப்பற்றி, வேலை நிறுத்தமும், போராட்டமும் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பது [illegible]ப்பிடத்தக்கது.

'தேர்தலும்-வர்த்தகர்களும்'

வடாற்காட்டில் பிரச்சாரக் குழு சுற்றுப்பயணம்

தமிழ்நாடு வர்த்தகர் கழகப் பிரச்சாரக் குழு தமிழ் நாடு முழுதும் சுற்றுப் பயணம் செய்யும். ஆகஸ்டில் சென்னையில் நடைபெறப் போகும் பலகட்ட முனை விற்பனை வரி 3-வது மாநாட்டின் அவசியத்தை விளக்கியும், 'சட்ட சபைத் தேர்தல்களில் வர்த்தகர்கள் ஈடுபடுவதா இல்லையா' என்பதை மாநாட்டில் நிர்மாணிக்கப்போவதையும், பலகட்ட விற்பனை வரி முறையால் வியாபாரிகளும், பொதுமக்களும் படும் தொல்லைகளை விளக்கியும் குழு, பிரச்சாரம் செய்யும்.

திருவாளர்கள் வேசவலால் காளிதாஸ் சேட் தலைவராகவும், வே. ச. விசுவநாதம், அப்துல்சத்தார், கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். 10—6—56 முதல் 15—6—56 தேதிவரை வடாற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்டபடி சுற்றுப் பிரயாணம் செய்வார்கள் :—

10—6—56 காலை இராணிப் பேட்டை; மாலை 3 மணி: ஆற்காடு. மாலை 6 மணி டவுன் ஹால், வேலூர்.

11—6—56 : பனப்பாக்கம் சோளிங்கபுரம், காவேரிப்பாக்கம்.

12—6—56 : திருவண்ணாமலை, போளூர், ஆரணி.

13—6—56: பள்ளிகொண்டை, குடியாத்தம், பேரணம்பட்டு.

14—6—56: ஆம்பூர், வாணியம்பாடி.

15—6—56 : திருப்பத்தூர், ஜோலார்பேட்டை.

கூட்டம் நடைபெறும் நேரங்களில் வர்த்தகர்கள் கடையடைப்பு செய்வார்கள்.

நடைமுறையில் சில இடையூறுகள் இருப்பினும் ரூ. 10 கோடி வருமானம் கிடைக்கிறதாம்

சில பொருள்கள் மீது ஒருமுனை வரிவிதிக்க சென்னை சர்க்கார் முடிவு

சில வாரங்களுக்குள் 7 அல்லது 8 பொருள்கள்மீது ஒரு முனை விற்பனை வரி விதிக்க சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். இந்தப் பொருள்கள் எவை என்பது தெரியவில்லை. இந்தப் பொருள்கள் இன்னின்னவை என்பதை சர்க்கார் விரைவில் வெளியிடுவார்கள்.

மதுரை-இராமனுதபுரம் வர்த்தக சபை சமர்ப்பித்த யாதாஸ்துக்கு மந்திரி எம். ஏ. மாணிக்கவேலு (நாயக்கர்) பதிலளித்த பொழுது மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"விற்பனை வரி சாதுர்யமான வரி முறையாகும். இது நல்ல வருமானம் கொடுக்கிறது என்பதில் சந்தேகமில்லை. முன்பெல்லாம் நிலவரி நமது வருமானத்தின் பெரும்பகுதியாக இருந்தது. இம் மாநிலத்தின் மொத்த வருமானம் ரூ. 16 கோடியில் சுமார் நான்கில் ஒரு பங்கு நில வருமான வரி மூலம் கிடைப்பதாகும். தற்போது விற்பனை வரி மூலம் சுமார் ரூ. 40 கோடி வருமானம் கிடைக்கிறது.

இந்த வரி நடைமுறையில் சில கஷ்டங்கள் காணப்பட்டன. இது பல வருடங்களாக இருந்துவரும் நில வருமான வரி முறையைப் போல அவ்வளவு சுமுகமாக இல்லை. இதன் அமுலிலுள்ள சங்கடங்கள் நீக்கப்பட்டுவருகின்றன.

"சட்டத்தின் இயல்பையும், அதனுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் கவனிக்கும்பொழுது விற்பனை வரி சட்ட நடைமுறையில் சில கஷ்டங்களைக் காணகிறோம். விற்பனை வரி செலுத்தும் வர்த்தகர்களுக்கு இடையூறு இல்லாமல் சுலபமாக வசூல் செய்யவும், சுமூகமாக இயங்கவும்படியாக இதனைச் செய்ய சர்க்கார் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

"ஒருமுனை விற்பனைவரி சகல கஷ்டங்களையும் நீக்கிவிடுமென்று மக்கள் கருதுகின்றனர். இயன்றவரை பல பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிப்பது பற்றி சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு முனையில் விதிக்கும் வரி தவறிவிட்டால் எல்லா முனைகளிலும் தவறிவிடுகிறது என்பதுதான் கஷ்டம். தேயிலை, காப்பி போன்ற மொத்த உற்பத்தி பண்டங்கள்மீது ஒருமுனை வரி நிர்ணயிப்பது சுலபமானது. அவ்வளவு சுலபமாக ஒருமுனை வரி விதிக்க இயலாத பண்டங்களும் உள்ளன. இவைகளை சமீபத்தில் சர்க்கார் பரிசீலித்துள்ளனர். 7 அல்லது 8 பொருள்கள்மீது ஒருமுனை வரி விதிக்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இந்த 7 அல்லது 8 பொருள்களின் பெயர்களை ரெவினியூ மந்திரி வெளியிட மறுத்துவிட்டார். 'இவை விரைவில் அறிவிக்கப்படும்' என்றார்.

திருக்குறள் வகுப்பு

9—6—56 இரவு 7 மணியளவில், இராயபுரம், இலக்கிய மன்றம் திருவேங்கடநாயக்கர் தெரு 8-ம் எண்ணுள்ள இல்லத்தில், திரு. அ. ஞானசுந்தரம் திருக்குறள் வகுப்பை நடத்துவார்.

மதுரை ஆலையில் கதவடைப்பு

12,000 பேர் பாதிக்கப்படுகின்றனர்

மதுரை, ஜுன் 7—

அடுத்து அறிவிக்கும் வரையில், மதுரை ஆலையினை மூடிவிடுவது என்று அறிவித்திருக்கிறார்களாம, நிர்வாகிகள்!

ஆலையில் கதவடைப்புச் செய்வதினால் சுமார் 12,000 தொழிலாளர்கள் வேலையற்று அவதியுறுவர் என்று தெரியவருகிறது

கதவடைப்பிற்குக் காரணம், தொழிலாளர்களின் சட்டவிரோதமான உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தான் என்றும் நிர்வாகிகள் கூறுகின்றனர்.

தொழிலாளர்கள், ஆலையின் ஒரு பிரிவில் வேலைப் பளு அதிகரிக்கப்பட்டது என்றும், அந்த வேலைப் பளு அதிகரிப்பை எதிர்த்தே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாயும் கூறுகின்றனர்.

அந்தப் பிரிவில் துவங்கிய வேலை நிறுத்தம், தொடர்ந்து பல பிரிவுகளுக்கும் பரவி, ஆலை முழுவதிலுமுள்ள தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிற அளவுக்குச் சென்றுள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் தான், வேலைப் பளு, மற்றும் அதை ஒட்டிய விவகாரங்கள் எல்லாம் தொழில் நீதிமன்றத்தின் விசாரணைக்குச் சென்றுள்ளன என்றும் தெரியவருகிறது.

கதவடைப்பு பற்றி தகவல் கிடைத்ததும், தொழிலாளர் இலாகா உயர்தர அதிகாரி மதுரைக்கு விரைந்திருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

சர்க்கார் ஆதரவில்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கும் போலீஸ்காரர்கள்! என்ன, வியப்படைகிறீர்கள்? போலீஸ்காரர்கள் தங்களுக்குச் சம்பளம் போதவில்லை என்று வேலைக்கு 'லீவு' கொடுத்துவிட்டு, சர்வோதயப் பணிபுரிய வந்திருக்கிறார்களோ என்று ஆச்சரியப்படுகிறீர்களா? இல்லை; இல்லை; அவர்கள், அசல் போலீஸ்காரர்கள்தான்! இன்னும் உத்யோகத்தில் இருப்பவர்கள்!

"இவர், திருவள்ளூர் போலீஸ்—இவர், ஊத்துக்கோட்டை போலீஸ்—இவர், பூவிருந்தவல்லி போலீஸ்—இப்படிப் பலப்பல இடங்களிலிருந்து வந்திருப்பவர்கள்! இது, காமராசரின் மூளை—'விநோபாஜி பக்தர்களுக்கு மட்டும் போலீசார் எவரும் புகக்கூடாது' என்று, கூறிவிட்டாராம்; அதனால், இந்த வேடத்தில் அவர்கள் புகுந்துகொண்டிருக்கிறார்கள்; அவ்வளவுதான!

"என்ன......அந்த 'கூட்'டும், கோட்டும் அணிந்து, அங்கங்கே நின்று கொண்டிருக்கிறார்களே, அவர்களைத் தெரிகிறதா? அவர்கள் எல்லாம் சர்க்கார் அதிகாரிகள்—'சர்வோதயம்' காண வந்திருக்கிறார்கள்!

"இங்கே இருக்க உங்களுக்குச் சலிப்பாக இருக்கிறதா? தலைவர்கள் தங்கும் குடிசைப் பக்கம்

போய்விட்டு வருவோம், வாருங்கள்!

"அங்கே, கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறார், ஒருவர்; ஒரு கையிலே குப்பைக் கூடை—மற்றொரு கையிலே துடைப்பம்! இவர், இந்த நாட்டவர் அல்ல—அமெரிக்கர்! அவர் செய்யும் வேலை என்ன, பார்த்தீர்களா? ஆனல், மற்ற சர்வோதய ஊழியர்கள் என்ன செய்கிறார்கள்? அங்கங்கே நின்று 'அரட்டை' அடித்துக் கொண்டிருக்கிறார்கள்! அதுதான் 'சர்வோதய' இலட்சணம் போலும்!"

அமெரிக்க நீக்ரோ பாடகருக்குத் தடை!

வாஷிங்டன், ஜுன் 7—

அமெரிக்க அரசியல் இலாகா நீக்ரோ பாடகர் பால் ராப்சன் என்பாருக்கு 'பாஸ்போர்ட்' தர மறுத்துள்ளதை அமெரிக்க 'அப்பீல் கோர்ட்' ஊர்ஜிதம் செய்ததாம்.

காமராசர் தகவல்

சென்னை, ஜுன் 7—

"எந்தெந்தப் பண்டங்களுக்கு ஒருமுனை விற்பனை வரியை சுலபமாக விதிக்கலாமென்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது," என்று சென்னை முதலமைச்சர் காமராசர் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் அவர் தெரிவித்ததாவது :—

"ஒருமுனை விற்பனை வரி விதிப்பதற்கான பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில், வரி ஏய்ப்பதைத் தடுப்பதும், நிர்வாக வசதியும் முக்கியமாக இருக்கும். ஒருமுனை விற்பனை வரி முறையில், எல்லாவித ஏய்ப்புகளும் நிற்கும் என்பது நம்மை பயக்கும் திட்டமேயாகும்; ஆனாலும், எல்லாப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிப்பதானால், மொத்தமாக வரிகளை ஏய்ப்பதற்கு இடமுண்டென்பதும் கவனிக்கத்தக்கதாகும். அதிலும் குறிப்பாக உற்பத்தி இடத்தை அரசியலாரால் நிர்ணயிக்க முடியாவிடில் வரி ஏய்ப்பது சுலபமாகிவிடலாம். பலமுனை விற்பனை வரி விதிப்பு முறையின் கீழ், ஒருமுனையில் ஏய்க்கப்பட்டாலும், வேறு முனையில் கண்டுபிடித்து வசூலித்து, நஷ்டமின்றி செய்துவிடலாம் என நம்ப இடமுண்டு. எனவே, உற்பத்தி இடத்தை அரசினரால் நிர்ணயிக்க முடியாத பல பண்டங்கள் விஷயத்தில் பலமுனை விற்பனை வரி முறையை நீடிப்பது தவிர்க்க முடியாததாகும்.

"ஏமாற்றுவதற்கு அதிக சந்தர்ப்பமில்லாத பண்டங்களைக் கொண்டுதான் இந்த ஒருமுனை வரி விதிப்பை பரிசீலித்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக காப்பிக் கொட்டையைச் சொல்லலாம்.

"உற்பத்தி இடங்களிலேயே எளிதாக சர்க்கார் வரி விதிக்கக் கூடிய பண்டங்களுக்கு மட்டும் ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு வரலாம்."

கழகக் கூட்டங்கள்

★

புதியம்புத்தூர்

எஸ்.பி.ஜி. மிஷன்பங்களா முன்பு 10-6-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் : பெ. துரைசாமி

பேசுபவர் :

எம். எஸ். இராமசாமி

★

குடந்தை :

அரண்மனைத் தோட்டத்தில்

11—6—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

மு. கருணாநிதி

மாயூரம் வட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

மாயூரம்—கூறைநாடு, ஆசிரியர் வேலாயுத மன்றத்தில், 10-6-56 காலை 10 மணிக்கு, நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; தேவைப்படும் செயற் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும்.

காலை 11 மணி—நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம்; பொருள் : 'மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்'.

மாலை 5 மணி—மாயூரம் வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்; பொருள்:'மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்'.

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு :

10—6—56 காலை 8 மணியளவில் சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

திருவள்ளூர் முன்னணிக் கழகம்

9—6—56 இரவு 7-30 மணிக்கு சென்னை, கொருக்குப்பேட்டை, எண் 15, நாகப்பநாயகன் தெரு, கழகப் பணிமனையில் தோழர் இரா. மதிவாணன் தலைமையில் 'நம் கழகம்' என்னும் பொருள் பற்றி கழகத் தோழர்களும் மன்றத் தோழர்களும் பேசுவர்.

தாய்மார் கழகப் பொதுக் கூட்டமும்—திருக்குறள் வகுப்பும்

9—6—56 பிற்பகல் 3-30 மணியளவில், சென்னை-பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில், 15 முத்துகிருஷ்ணன் தெரு இல்லத்தில், பொதுக்கூட்டமும், திருக்குறள் வகுப்பும் பேராசிரியர் மயிலை-சிவ-முத்து தலைமையில் நடைபெறும். தோழியர்கள் வ. பா. தாமரைக்கண்ணி, ஜி பி. அமுதா, வெற்றிச் செல்வியார், அனுசுயா — சோமசுந்தரம், சுந்தரம்மாள், பரமேஸ்வரி ஆகியோர் பேசுவர். கழகக் குழந்தைகளின் ஆடல் பாடலும் உண்டு. தம் பெயரைத் தமிழில் மாற்றிக்கொள்ள விரும்பும் குழந்தைகட்கு, திரு நச்சினார்க்கினியன் தமிழ்ப் பெயரிடுவார்.

தூனை நகர இளைஞர் கழகம்

9—6—56 மாலை 6-30 மணிக்கு மாணிக்கச்செட்டித் தெரு கழக மனையில், தோழர் எஸ். எம். பாசில் 'புத்தரின் வாழ்க்கை வரலாறு' பற்றி பேசுவார்.

மறைவு

சென்னை, ஜுன் 8—

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகச் செயலாளரும், சிறந்த உழைப்பாளருமான தோழர் ஜெயகீதம் அவர்களின் தந்தையார் வைத்தியலிங்கம் அவர்கள் நேற்று இரவு இயற்கை எய்தினார். இன்று மாலை 4 மணிக்கு சவ அடக்கம் நடைபெறும்.

தந்தையை இழந்து தவிக்கும் தோழருக்கும், குடும்பத்தாருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர், 3-வது வட்ட தோழர்கள்.

நமது அனுதாபமும் உரித்தாகுக.

(ஆ-ர்.)

திருமணங்கள்

10—6—56 காலை 8 மணியளவில், சென்னை—பெரியமெட்டு, ஸ்டிங்கர் தெருவில், தோழர் பா. மாதவராசன் — தோழியர் ஆர். சரசா திருமணம், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை - ஆர். எஸ். பாண்டியன், மு. சுந்தரராஜ் எம். சி., அ. இராவணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

10—6—56 காலை 8-30 மணியளவில், சென்னை-புளியந்தோப்பு ஐரோடுக்கு அடுத்த கிரே நகர் பள்ளம் 3-வது லேன், 58-ம் எண் இல்லத்தில், தோழர் ஆர். இராமாஞ்சி—தோழியர் எம். சரோசனி திருமணம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், சா. கோ. நாராயணசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

ஃ ஃ ஃ

10—6—56 காலை 9 மணியளவில், சென்னை-திருவல்லிக்கேணி, அக்பர்சாகிப் தெரு, எண் 34 இல்லத்தில், தோழர் பி. கே. கோவிந்தன் — தோழியர் இராதை வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்தினம், அ. பொ. அரசு, எம். சி., கோ. தாமோதரன், நெல்லை - கபிலன், எம். கே மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

10—6—56 காலை 9 மணியளவில், ஆலந்தூர், முத்தியால் ரெட்டி வீதியிலுள்ள 'ரோஷனல் கன்வெக்ஷனர் ஒர்க்ஸ்' கட்டடத்தில், தோழர்கள் கா. அப்பாதுரையார் தலைமையிலும், டி. வி. நாராயணசாமி முன்னிலையிலும், தோழர் கே. எஸ். அருணாசலம்—தோழியர் நிர்மலாதேவி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

ஃ ஃ ஃ

11—6—56 காலை 7 மணியளவில், திட்டக்குடி மணமகன் இல்லத்தில், தோழர் ஆர். பிச்சுக்குட்டி தலைமையில், தோழர் சி. நடராசன் — தோழியர் காசியம்மாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் தில்லை-வில்லாளன், ஆர். பாலகுருசாமி வாழ்த்துரை வழங்குவர்.

* * *

11—6—56 காலை 10 மணியளவில், மன்னார்குடி, குன்னோஜி ராஜாம்பாளையத் தெரு, மணமகன் இல்லத்தில், தோழர் ப. நாராயணசாமி தலைமையில், தோழர் ந. சென்ராசு—தோழியர் கௌசலை திருமணம் நடைபெறும் தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

ஃ ஃ ஃ

11—6—56 காலை 9 மணியளவில், சேலம் மாவட்டம் சங்ககிரி புரத்தில், தோழர் டி. கே. குருநாதன்—தோழியர் சாரதாம்பாள் திருமணம் நடைபெறும்.

* * *

11—6—56 காலை, புதியம்புத்தூரில், தோழர் மாரியப்பன்—தோழியர் மாரியம்மாள் திருமணம் நடைபெறும். தோழர் எம். எஸ். இராமசாமி வாழ்த்துரை வழங்குவார்.

* * *

11—6—56 காலை 9 மணியளவில், சேலம் மாவட்டம் உலிபுரத்தில், மணமகன் இல்லத்தில், திரு. எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ, அவர்கள் தலைமையில், தோழர் குறள்நிதி — தோழியர் பாப்பா திருமணம் நடைபெறும். தோழர் ஆனைமுத்து வாழ்த்துரை வழங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.